[1978 மார்ச் 27

திரு. ஓ. சுப்பிரமணியன் : துணை தாலுகாவை முழு தாலுகாவாக உயர்த்தும்போது, அது எந்த அடிப்படையில்? ஜனத்தொகை அடிப்படையிலேயா அல்லது விஸ்தீரணத்தைப் பொறுத்தா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எந்த அடிப்படையில் என்பதைப்பற்றிய குறிப்பு இல்லை. ஆனால், மாறாக எல்லாத் துணை மாவட்டங்களையும் முழுமையான வட்டங்களாகப் படிப்படியாக மாற்றியமைக்க 1971-ல் அரசு கொள்கை அளவில் முடிவெடுத்தது. அப்பொழுது இந்த மாநிலத்தில் 43 துணை வட்டங்கள் இருந்தன. 1973-74 ஆம் ஆண்டில் 4, 1974-75 ஆம் ஆண்டில் 7 துணை வட்டங்கள் முழுமையான வட்டங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன. எந்த அடிப்படையில் தரம் உயர்த்தப் பட்டது என்பதற்கு தனிக் கேள்வி போடக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூரில் வீட்டுமனைகள் ஒப்படை.

*669 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தாசில்தார் அலுவலகத்தில் 1 நவம்பர் 1977 முதல் இன்றுவரை கொடுக்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) 1 நவம்பர் 1977 முதல் இன்றுவரை ஏதேனும் பட்டா திரும்பப் பெறப்பட்டுள்ளதா?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டத்தில் 1977 ஆம் ஆண்டு நவம்பர் 1-ம் தேதி முதல் 1978 பிப்ரவரி முதல் வாரம் வரையில் 410 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருப்பூரில் கடந்த நவம்பர் மாதத்தில், ஒரு பட்டாவைத் திருப்பி வாங்கி இருக்கிறார்கள், தாசில்தார் அவர்கள். எனவே, அதுபற்றி தகவல் அமைச்சரிடத்தில் இருந்தால் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 27]

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டத்தில் 1977-ஆம் ஆண்டு, நவம்பர் 1-ஆம் தேதி முதல் 1978 பிப்ரவரி வரையில் 410 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. ஆ. நடராசன் : பட்டா ஏதேனும் திரும்பப் பெறப் பெற்றதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : நவம்பர் 1977 முதல் இன்று வரை ஏதேனும் பட்டா திரும்பப் பெறப்பட்டதா என்று கேள்வி. பதில் இல்லே.

தென்காசியில் சப்-கோர்ட்.

*670 வினு—திரு. எம். எம். ஏ. ரசாக் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லே மாவட்டம், தென்காசியில் சப்-கோர்ட் அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR :

(a) Yes.

(b) The proposal is under the consideration of the Government.

திருவெறும்பூர் தொழிற்பயிற்சிப் பள்ளி

*671 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொழிற்பயிற்சிப் பள்ளியில் (Industrial Training Institute) 10-7-1977 மற்றும் 11-7-1977 அன்று நடைபெற்ற தேர்வில் முறைகேடுகள் நடந்துள்ளதுபற்றி அரசுக்குத் தகவல் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?